Judicial Form No. 53
(see Rule 42)
Deposition of the Witness
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, UTHAMAPALAYAM.
CC No.327/2020 Date: 02.08.2024
Deposition of witness for prosecution: PW 4 ( LW9 )
Defence:
Court:

| | | | |
|---|---|---|---|
| Name | திரு. நாட்ராயன் | Caste | |
| Father/ Husband Name | பிச்சைமணி | Calling | காய்கறி வியாபாரம் |
| Village | ஓடைப்பட்டி | Religion | இந்து |
| Taluk | உத்தமபாளையம் | Age | 30 |

Solemnly affirmed in accordance with the provision of the Oaths Act 1969 (central Act 44 of 1969) on 02.08.2024 TIME **01.30pm**

எதிரி ஆஜர்.

**முதல் விசாரணை :-**

ஆஜர் எதிரியை தெரியும். டிரைவராக வருவார். கடந்த 31.01.2018-ம் வருடம் TN 61 AD 7171 என்ற பதிவு எண் கொண்ட எனது ஆட்டோவை ஓடைப்பட்டி நந்தகோபால் மண்டபம் அருகே உள்ள ஆட்டோ ஸ்டாண்டில் காலையில் நிறுத்தியிருந்தேன். அன்றைய தினம் ஸ்யாம் சுந்தர் என்பவரிடம் சேதுராமன் தோட்டத்திற்கு கோவை பதியம் ஏற்ற சென்றுவிட்டேன். திரும்பி வரும் போது சமத்துவபுரம் ஆர்ச் அருகே தங்கபாண்டி என்பவர் வந்தார். அவர் என்னிடம் எனது ஆட்டோவை வைரமுத்து தெரியாமல் எடுத்துபோய்விட்டு ஆட்டோ விபத்து ஏற்பட்டு விட்டார் என்றும் கூறினார். அப்போது தங்கபாண்டியின் ஆட்டோவில் எதிரி வைரமுத்துவும், பிரதாப்பும் இருந்தார்கள். மேற்படி விபத்தில் எனது ஆட்டோ விழுந்ததில் பிரதாப் என்பவருக்கு காயம் ஏற்பட்டியிருந்தது. வைரமுத்து, பிரதாப்பும் மருத்துவமனைக்கு சென்று கொண்டிருந்தார்கள். நானும் அவர்களுடன் சின்னமனூர் அரசு மருத்துவமனைக்கு சென்றேன். பின்னர் க.விலக்கு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு அனுப்பிவைத்தார்கள். நான் இருசக்கர வாகனத்தில் சென்றேன். மருத்துவமனைக்கு செல்லும் வழியில் பிரதாப் இறந்துவிட்டதாக தகவல் தெரிந்துகொண்டேன். மேற்படி விபத்து தென்பழநி அஞ்சாலம்மரம் அருகே நடந்தது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :-**

எதிரி ஆஜர் வாய்ப்பளித்தும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.

சாட்சி இன்று இந்நீதிமன்றத்தில் ஆஜராகி என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் வாய்மொழியாக சாட்சியம் அளித்ததை இந்நீதிமன்றம் தட்டச்சர் மூலமாக பதிவு செய்து படித்து பா'த்து விளக்கி கூறி சரியென ஒப்புக்கொண்டுகையொப்பம் செய்துள்ளார்.

ஒம்/ திரு. இராமநாதன்
நீதித்துறை நடுவர்,
உத்தமபாளையம்.